முருகப்பெருமான் துணை

**மகான் பூனைகண்ணார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.03.2024,** வியாழக்கிழமை

1. கலியினில் அற்புதம் நிகழ்த்த
கந்தமகா சக்தியாக வந்த
அழியாமை பெற்ற அரங்கா
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சேல் திங்கள்
குறைவிலா மூவைதிகதி குருவாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 15 ம் நாள், 28.03.2024, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
தேசிகன் கேட்க பூனைகண்ணார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
உத்தமர்களாக ஞானவான்களாக
ஞானபூமியாக உலகை மாற்ற
நல்லோர்களை உருவாக்கும் வண்ணம்
4. வண்ணமாக ஞானமருளி
வழிகாட்டும் அரங்க ஞானி
அண்ணல் துணை வேண்டி
அகிலத்தார் அனுகிவந்து
5. வந்து ஞான உபதேசங்களை
வழிகாட்டியாக நல்ல வரமாக
சிந்தை ஏற்றி பின்தொடர
செகத்தார்க்கு ஞானபலம் கூடி
6. கூடியே கலியிடர்களை வெல்லும்
குருவருள் பலமும் கிட்டி
நாடிவரும் தெளிவு திடமும்
ஞானபலமும் மேலவர்கள் ஆக
7. ஆகவே உயரும் நிலைகண்டு
அரங்கமகான் தேடுகின்ற
மகான்களாகவும் தேறியே
மண்ணுலகை மாற்றுகின்ற

8. மாற்றுகின்ற அற்புதம் படைப்பர்
மரணம் மறுமை கடந்து
ஆற்றல்மிக்க மக்களாக
அரங்கமகான் வழிகாட்டலில்
9. வழிகாட்டலில் வரலாறு படைப்பர்
வருங்காலம் வேலவன் தன்
வழிபாடுகளாக பெருகும்படி
வையகத்தில் சரவணசோதி ஏற்றி
10. ஏற்றியே முருகா முருகா எனும்
ஏகாந்த செபதபம் பெருக
மாற்றமும் நல்ல தேற்றமும்
மண்ணுலகில் படைத்துநன்கு
11. படைத்துமே கலியுகம் தன்னையே
பாதுகாப்புமிக்க ஞானயுகமாக
தடையற உருவாக்கி சிறப்பர்
தாமுரைத்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—